# ஜெயா கல்லூரிகளின் பட்டமளிப்பு விழா




▶ திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரி, காஞ்சிப்பாடி ஜெயா தொழில்நுட்ப கல்லூரிகளின் பட்டமளிப்பு விழா, கல்விக்குழும தலைவர் அ.கனகராஜ் தலைமையில் நடந்தது. அகில இந்திய தொழில்நுட்ப கல்விக்குழு தலைவர் அனில் த.சஹஸ்ரபுதே கலந்துகொண்டு, 634 மாணவர்களுக்கு பட்டங்களையும், பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்ற 16 மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் ரொக்கப் பரிசுகளையும் வழங்கினார். அருகில் நிர்வாகிகள்

---

**திருவள்ளூர், ஜூலை 24:** திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரி, காஞ்சிப்பாடி ஜெயா தொழில்நுட்ப கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளின் பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. ஜெயா கல்விக் குழும தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் தலைமை வகித்தார். கல்விக்குழும செயலர் க.விஜயகுமாரி, துணைத்தலைவர் க.நவராஜ் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர்கள் கே.விஜயராகவன், என். கணேஷ் வரவேற்றனர்.

அகில இந்திய தொழில்நுட்ப கல்விக்குழு தலைவர் அனில் த.சஹஸ்ரபுதே கலந்துகொண்டு, 634 மாணவர்களுக்கு பட்டங்களையும், பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்ற 16 மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் ரொக்கப் பரிசுகளையும் வழங்கிபேசினார்.

அவர் பேசுகையில், 'மாணவர்கள் பட்டம் பெறுவது வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்ச்சி. வாழ்நாளில் ஒழுக்கத்தை கடைபிடிப்பது அறமாக இருக்க வேண்டும். இன்று ஒவ்வொரு துறையிலும் மிகுந்த போட்டி நிலவுவதால் கூட்டு முயற்சியுடன் செயல்பட வேண்டும்.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் எந்த படிப்பை தேர்ந்தெடுக்கிறார்களோ, அந்த படிப்பை தொடர சுதந்திரம் அளிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் சிவில் சர்வீஸ் தேர்வு முடிவுகளில், பொறியியல் படித்த மாணவர்கள்தான் தேர்வு பெறுகின்றனர். இது பொறியியல் படித்த மாணவர்களின் திறமைக்கு ஒரு சான்றாகும். கடினமாக உழைத்தால் வாழ்க்கையில் எளிதில் வெற்றிபெறலாம்' என்றார